# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 66 பிரசோற்பத்தி தை 18 (01 · 02 1992) சனி


### காணாமற் போவோர்

## ஸ்ரீலங்காவின் 'சாதனை' ஐ. நா அறிக்கை வெளியானது

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மீறல் கண் காணிப்பு குழு ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல் தொடர்பான தனது அறிக்கையை உத்தியோகபூர்வ மாக வெளியிட்டுள்ளது கடந்த ஆண்டு ஒ·டோபரில் ஸ்ரீலங்காவில் தாம் மேற்கொண்ட விஜயத்தின் போது திரட்டிய தகவல்

... 04ஆம் பக்கம் பார்க்க

# இறக்குமதியாகும் பாலுணவுகள் ஆபத்தானவை என எச்சரிக்கை!

## கொழும்பு அணுவிஞ்ஞானி தகவல்

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாலுணவு பொருள்களில் கதிர் வீச்சு (Radioactive) பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள பிரபல அணுவிஞ்ஞானி டொக்ரர் ...ன்வில தர்மவர்தன அறிவித்துள்ளார்.

...ந்த பாலுணவுகளில் ...னப்படும் கதிர்வீச்சு உடல் ...த்துக்கு தீங்கானது என ... பாவனைக்குதவாதவை ...வும் அவர் எச்சரித்தார். ...லங்கைக்குள் வரும் எந்த ...ளிநாட்டு பாலுணவுப் ...ருள்களும் இப்போது சோதனையிடப்படுவதில்லை. எனினும் டொக்ரர் தர்மவர் தன இதுவரை இறக்குமதி யாகும் பாலுணவுப் பொருள் களை பரிசோதனை செய்து வந்த போதிலும் அரசின் உயர் மட்டத்திலுள்ள 'இனந் தெரியாத'சிலர் தொலைபேசி மூலம் சோதனைகளை கைவிடுமாறு அண்மையில் விடுத்த எச்சரிக்கையை அடுத்தே தாம் அப்பரிசோ தனையை கைவிட்டதாக தெரிவித்தார்.

தொலைபேசி எச்சரிக்கையை

—04 ஆம் பக்கம் பார்க்க

## சைக்கிள் குண்டுவெடிப்பு இறந்தோர் தொகை 6 ஆகியது

மட்டக்களப்பில் நேற்று முன்தினம்காத் தான்குடி,வ் முனைப் பகுதிகளில் வெடித்த சைக்கிள் குண்டுகளினால் இறந்தோர் தொகை 6ஆக அதிகரித்துள்ளது.

குண்டுவெடிப்பில் ஸ்தலத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தலைமைப் பீடத்துக்கு லலித், காமினி போட்டி

அதிருப்தியாளர்களின் புதிய கட்சிக்குள் தலைமைப் பதவிக்குப் பெரும் போட்டி நடைபெறுவதாகக் கொழும் புச் செய்திகள் தெரிவிக்கின் றன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சியின் தலை வர் அத்துலத்முதலியென லங்காதீப சென்ற வாரம் செய்தி வெளியிட்டது.

அடுத்த நாள் அதே பத்திரி கையில் கட்சி மறுப்புத் தெரி வித்திருந்தது.

அத்துலத் முதலிக்கும் காமினி திஸநாயக்காவுக்கும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உணவு முத்திரை வரவில்லை

பாடசாலை மாணவர்களுக் கான 5 மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகள் இன்றும் யாழ்நகர் வந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

### ...தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும்

# ...8-ஆம் திகதிக்கு முன் நீதிமன்றில் சரணடையுமாறு உத்தரவு!

...ஜீவ் காந்தி கொலை ...தி தொடர்பாக விசா ...ணகளை மேற்கொள்ள ...ர் விடுதலைப்புலிகளின் ...லவர் பிரபாகரனையும் ...ன் உளவுப்படைத் தலை பொட்டம்மானையும் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் சரணடையு மாறு நீதிபதி சித்திக உத்த ரவு ஒன்றை பிறப்பித்துள் ளார்.

இத்தகவலை நேற்று வெளி யிட்ட இந்திய வானொலி பிரபாகரனும், பொட்டம் மானும் குற்றம் சாட்டப் பட்ட சந்தேக நபர்களாக ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் நீதிபதி சித்திக்கினால் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளதாக வும் தெரிவித்தது.

மத்திய புலனாய்வுக்குழு அளித்த மனுவின் அடிப் படையிலேயே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தனது இந்த அறிவிப்பை இந்திய, இலங்கைப்பத்திரிகை களில் விளம்பரங்களாக பிர

—04 ஆம் பக்கம் பார்க்க

## 15 மாவீரர்களின் ஞாபகார்த்தமாகக் கூட்டம்

...ழீழ விடுதலைப்போராட் ...ஆரம்பித்த காலம் தொ ...ம் பல்வேறுசம்பவங்களில் ...னைவெற்றிக்காகதைமா ...ன் வீரச்சாவைத் தழு ...கொண்ட 15 மாவீரர்கள ...சார்த்தக் கூட்டம் பருத் ...துறை பழைய சந்தை ...தானத்திலே வியாழக் கிழமை இரவு நடைபெற்றது.

மேஜர் ரஞ்சன் சித்தம்பா உருவப்படமுன்னால் அமைக் கப்பட்ட மேடையில் விடுத லைப்புலிகள் மக்கள் முன் னணி வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா தலைமை

—04ஆம் பக்கம் பார்க்க

## பொங்கலுக்கு வந்த சர்க்கரை இராணுவம் அபகரிப்பு?

கொழும்பிலிருந்து பொங் கல் பண்டிகைக்கு கப்பல்மூலம் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் காங்கேசன்துறை இராணுவத்தினருக்குச் சென் றடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒரு ப. நோ கூ சங்கத் திக்குரிய 40 மெற்றிக் தொன் சர்க்கரை உட்பட பல உண

— 04 ஆம் பக்கம் பார்க்க

### அகதி முகாம்களில்

## குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் 219980 அகதிகளைக் கொண்ட 66660குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம் களிலும், வெளியிலும் வசிக் கிறார்கள் என யாழ் அரச அதிபர் அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் மகாநாட்டில் கூறினார்.

யாழ் செயலகத்தில் நடந்த இந்த மகாநாட்டில் தொண் டர் ஸ்தாபனங்களின் பிரதி நிதிகளும் செயலக அதிகாரி

... 04 ஆம் பக்கம் பார்க்க

### ...டிப்படை மனித உரிமை மீறல் சம்பவம்

## ...எஸ். பி. பதவி உயர்வு குறித்து 50 இன்ஸ்பெக்டர்கள் வழக்கு

...ண்மையில் நடைபெற்ற ...எஸ். பி. (உதவி பொலிஸ் ...பிரின்டன்) பதவியுயர்வு ...ர்முகப்பரீட்சை அநீதியாக ...த்தப்பட்டதாக 50 ...ரஷ்ட பொலிஸ் இன்ஸ் ...க்டர்கள் புகார் தெரிவித் ...ள்ளனர்.

...ந்த நியமனம் அடிப்படை ...த உரிமை மீறல் சம்பவம் ...க்கோரி இவர்கள் நீதி மன்றம் செல்லவிருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறிரணதுங்க, பொலிஸ் மா அதிபர் ஏர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சிலாவத்தை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினமிரவு முழு வதும் முல்லைத்தீவு இராணு வமுகாமிலிருந்தும் மணலாறு இராணுவ முகாமிலிருந்தும் கடும் ஷெல் தாக்குதல்கள்

... 04 ஆம் பக்கம் பார்க்க

### ஸ்ரீலங்கா தமிழர்களில் சந்தேகம்

## போலிக் கடவுச்சீட்டுத் தயாரிக்கும் இயந்திரம்கனடாவில்கண்டுபிடிப்பு

போலி கடவுச்சீட்டுகள் தயாரிக்கும் இயந்திரசாதனங் களும், புகைப்படம் பிரதி யெடுக்கும் உபகரணங்களும் கனடாவிலுள்ள ரொறன்ரோ புலனாய்வுத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவைச் சேர்ந்தவர் களே இந்த மோசடியில் ஈடு பட்டதாகத் தெரிவிக்கும் கனடியச் செய்தியாளர், அரை குறையாகத்தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் பெட்டி யொன்றினுள் கண்டெடுக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த மோசடிபற்றி விசா ரணை நடத்திய பொலிஸார் இப்படியான கடவுச்சீட்டு வைத்திருந்தவர் வவுனியா வைச் சேர்ந்த பெண் என்றும் 1987இல் கனடாவுக்கு வந்த வர் என்றும் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா ...திகள் ஒரு

... 04 ...ம் பக்கம் பார்க்க

திரைக்குப் பின்னால்

# சோவியத்தில் கடைசி நேர அவமானம்

ரஷ்ய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக இருந்த மிகைல் கோர்பச்சேவ் விடைபெறும் நாள்......

அவர் பதவியிலிருந்து இறங்குவதற்கு சில மணி நேரத்திற்கு முன் கோர்பச்சேவைப் பற்றி ரஷ்ய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் தெரிவித்த கருத்துக்கள் கோர்பச்சேவைப் புண்படுத்திவிட்டன....

''இதையெல்லாம் கேட்டுக்கொண்டு என்னால் இருக்க முடியவில்லை. கடந்த சில மாதங்களாக நான் எதைச் செய்தாலும் அதை எதிர்த்துக் கொண்டிருந்தார் யெல்ட்சின், கோர்பச்சேவை எப்போதும் எதிர்த்துக் கொண்டிருந்தது பெரிய விஷயமல்ல. அவர்கள் எதிர்ப்பதற்கு இனி யாரும் இல்லை. இனி என்ன வேண்டுமென்றாலும் செய்யட்டும்'' என்றார் கோர்பச்சேவ்

''முன்னாள் அதிபருக்கு நாங்கள் இன்னின்ன சலுகைகளை அளிக்கப்போகிறோம் ... மிக கௌரவமாக அவர் நடாத்தப்படுவார்'' என்று அறிவித்த யெல்டசின் கோர்பச்சேவ் ராஜினாமாச் செய்த அன்று இரவே அரசாங்க பங்களாவை உடனே காலி செய்யச் சொல்லி கோர்பச்சேவின் மனைவி ரெய்ஸாவிற்கு உத்தரவிட்டார்

முன்னாள் அதிபருக்குப் புதிதாக ஒதுக்கப்பட்ட பங்களா கூட ரொம்ப ரொம்ப சாதாரணமானதாம்.

கிரெம்ளின் மாளிகையை விட்டுக் கிளம்புவதற்கு முன் சில நினைவுப் பொருள்களை எடுத்துச் சென்று பாதுகாக்க வேண்டுமென கோர்பச்சேவ் ரொம்பவும் ஆசைப்பட்டிருக்கிறார் கிரெம்ளின் மாளிகையின் உச்சியில் 74 ஆண்டுகளாகப் பறந்த சோவியத் நாட்டின் செங்கொடியும் அதில் ஒன்று.

கோர்பச்சேவ் ராஜினாமாக் கடிதம் கொடுத்த மறு நிமிடமே அந்தச் செங்கொடியை கிரெம்ளின் செக்யூரிட்டி ஒருவர் வேகமாகக் கீழே இறக்கிக் காத்திருந்த வாகனமொன்றினுள் சுருட்டித்தூக்கி எறிந்திருக்கிறார்.

இன்னும் வேதனையான விடயம் கோர்பச்சேவ் ராஜினாமாச்செய்த மறுநாள் நடந்தது தான். விட்டுச் சென்ற தனது உடமைகளை எடுத்துப்போகத் தனது அலுவலகத்திற்கு வந்திருந்தார் கோர்பச்சேவ். தனது ரூமுக்கு உள்ளே நுழைந்தவருக்கு ஷாக்!

ஏற்கனவே அங்கு யெல்டசின் உட்கார்ந்து சீரியஸாகத் தனது பணியில் ஈடுபட்டிருந்தாராம்.

★ அடுத்தடுத்து 4 குண்டுகள் வெடிப்பு ★ மேலும் வெடிப்பு நிகழலாமென அச்சம்

# காத்தான்குடியில் பதற்றம்!

# இனவன் செயலைத்தூண்ட முயற்சி

காத்தான்குடியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து அங்கு பதட்ட நிலை உருவாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் அங்கு அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்தன. மேலும் குண்டுகள் வெடிக்கலாமென்ற அச்சத்தினால் கடைகள் இழுத்து மூடப்பட்டன, வீதிகளும், சந்தைகளும் சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடின.

இதேவேளை இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து அங்கு இனவன்முறைகளைத் தூண்டும் முயற்சியில் சிலர் ஈடுபட்டதாகவும், பதட்ட நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காத்தான்குடி மக்கள்வங்கி, தபால் நிலையம் மற்றும்பாடசாலைகள் ஆரையம்பதியிலுள்ள அரச திணைக்களங்கள் என்பவற்றில் கடமையிலிருந்த தமிழ் ஊழியர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறினர் மட்டக்களப்பிலிருந்து தமிழ் ஊழியர்கள் எவரும் நேற்று அங்கு செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கலைஇலக்கிய கருத்தரங்குகள் மூன்று பகுதிகளில் இன்று

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் கலை, இலக்கியத் துறை சார்ந்த கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன.

வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு திரு. க. சி குலரத்தினம் அவர்கள் ''அறுபது ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்'' என்ற பொருளில் உரையாற்றுவார்.

தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பிற்பகல் 2. 30 மணிக்கு திரு ஐ. சாந்தன் அவர்கள் ''ஒரு இலக்கியவாதியின் இன உணர்வுகள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

வலிகாமத்தில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் ''எமது போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் ஆற்ற வேண்டிய பங்கு'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

கடற் புலிகள் பிரிவில் குருநகரில் பிற்பகல் 3 மணிக்கு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் ''கிராமியக் கலைகள்'' (நாடகம்) என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

## மாடு திருடும் கோஷ்டி காவற்துறையால் கைது

சாவகச்சேரிப் பகுதியில் அடிக்கடி மாடுகளைத் திருடி வந்த கோஷ்டி ஒன்று சாவகச்சேரி காவற்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

திருடப்பட்ட மாடு ஒன்று விற்பனைக்காக அறுக்கப்பட்ட போது அகப்பட்டதை அடுத்து இக்கோஷ்டி பிடிபட்டதாகத் தெரியவருகிறது.

இத் திருட்டுச் சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (16)

ஈராக்மீதான தடை } 10 குழந்தைகள்

## மருந்து இன்றி மரணம்!

ஈராக் மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைகாரணமாக மருந்துப்பற்றாக்குறையினால் அங்கு தினமும் சராசரி, ஐந்து குழந்தைகள் இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மருந்து இன்மையால் அங்கு 10 குழந்தைகள் இறந்தனர். இந்தக் குழந்தைகளின் சடலங்கள் பாக்தாத்துக்கு எடுத்துவரப்பட்டு, அங்கு ஒன்றாக ஊர்வலமாக இறுதிக்கிரிகைகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டன:

இந்த மரண, ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்குஎதிராக கோஷமிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உதவிவழங்கும்நாடுகளைத் தம்பக்கம் ஈர்க்கும் முயற்சியில் இலங்கை

அடுத்தமாதம் 7 ஆம் திகதி பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது தான் கோரவுள்ள முழுத்தொகையையும் தடையின்றி பெறுவதற்கான சகல முயற்சிகளிலும் இலங்கை தற்பொழுது ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளைக் கூட்டத்திற்கு முன்னரேயே சந்தித்து, அவர்களைத் தம்பக்கம் ஈர்க்கும் முயற்சியிலும் இலங்கை அதிகாரிகள் இறங்கியுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன்சில தினங்களுக்கு முன்னர் ஜப்பான் சென்றமையும் இத்தகைய ஒரு விஜயமே எனவும் சொல்லப்படுகின்றது.

இவர் ஜப்பானிலிருந்து பாரிஸுக்குச் செல்லுவார்.

### ஆஸி அணி வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஐந்து நாள் கிரிக்கெட் பந்தயத் தொடரில் 4 வது போட்டியில் அவுஸதிரேலிய அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (16)

## சம்மாந்துறை தமிழ் விரிவுரையாளர்களை கடமைக்குத் திரும்பப் பணிப்பு

சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து வெளியேறி வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளில் தற்காலிகமாகப் பணிபுரியும் தமிழ் விரிவுரையாளர்களையும், போதனாசிரியர்களையும் உடன் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்குக் கடமைக்குத் திரும்புமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியைச் சூழ்ந்திருந்த தமிழ்க் கிராமங்களான வீரமுனை, பளவத்தை, வளத்தாப்பிட்டி. சம்மாந்துறை தமிழ் டிவிஷன் பகுதி மக்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்து தற்பொழுது காரைதீவு, திருக்கோயில் பிரதேசங்களில் அகதிகளாக உள்ளனர்.

அத்துடன் தமிழ் மாணவர்களில் ஒரு [illegible] மேற்படி கல்லூரிக[illegible] உள்ள[illegible]ன்றனர்.

இந்த ரீதியில் மீண்டும் எப்படி அங்கு கடமைக்குத் திரும்பமுடியுமெனத் தமிழ் ஊழியர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

## 1991இல் வறுமை நிவாரணத்துக்கு 1158கோடி ரூபா செலவு!

வறுமையினாலும் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கவெனக் கடந்த வருடம் 1158 கோடி ரூபா செலவிடப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு மதியபோசனம் வழங்க 150 கோடி ரூபாவும், வறுமை நிவாரண உணவு முத்திரைக்கு 360 கோடி ரூபாவும், ஜனசக்தித் திட்டத்திற்கு 490 கோடி ரூபாவும், அகதிகளுக்கான உலர் உணவு வினியோகத்திற்கு 126 கோடி ரூபாவும், இலவச பாடப் புத்தக வினியோகத்திற்கு 32 கோடி ரூபாவும் செலவிடப்பட்டதாக இக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடத்திற்கான செலவினம் மேலும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிறிய செய்திகள்

### வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக் கிழமை தோறும் இடம்பெறும்வாராந்தக் கருத்தரங்கு நாளை 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் ''எனது கலை, இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரை ஆற்றுவார்.

### கலை வெளிப்பாட்டு விழா

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கிளி. மாவட்டக் கவின் கலைக் கல்லூரி வழங்கும் கலை வெளிப்பாட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி கல்லூரி அரங்கத்தில் மாணவர்களுக்கு காலை 9 மணிமுதல் 2 மணி வரையும் பெரியோர்களுக்கு மாலை 7 மணிக்கும் நடைபெறவுள்ளது

இந்த விழாவில் ஓவியக் கண்காட்சி, வயலின் இசை, வாய்ப்பாட்டு, நடனம், இசை நிகழ்ச்சி, இற்றார் இசை, ஓகன் இசை, ஹார்மோனியம் இசை, மிருதங்க இசை, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

### நிறைவு விழா

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய 10-வது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரட்ணம்-யோகி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### ஆசிரியர் கலந்துரையாடல்

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியரின் பங்களிப்பு பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம், கோப்பாய்பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

### விவசாயக் கலந்துரையாடல்

சுன்னாகம் லயன்ஸ் கழகமும், கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விவசாயக் கலந்துரையாடல் இம்மாதம் இரண்டாம் திகதி காலை 9.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெறும்.

ஆ. மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் கருத்தரங்கில் கே குணரத்தினம், எஸ். பொன்னுத்துரை, எஸ். விஜயரத்தினம், திருமதி எஸ். தனபாலசிங்கம், மு கந்தசாமி ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.


வரி விளம்பரம்

ஆட்கள் தேவை

அச்சுக்கோர்ப்பாளர்களும், கையால் இயக்கும் அச்சு இயந்திர இயக்குனர்களும் உடன் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி சுதா அச்சகம் ஞானபாஸ்கரோதய வீதி. (முரசொலி அருகாமை) கல்வியங்காடு.

02001

## புலமைப்பரிசில் பெற்று உயர்கல்வி கற்கச் சென்ற

# 35 இலங்கை மாணவர் மாஸ்கோவில் அகதிகளாக!

சோவியத் ரஷ்யாவில் உயர்கல்வி கற்பதற்குச் சென்ற 35 இலங்கை மாணவர்கள் தற்பொழுது அங்கு அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சோவியத் குடியரசுகளில் ஒன்றான ஜோர்ஜியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதற்காக இவர்கள் 35 பேரும் இலங்கையிலிருந்து அங்கு சென்றிருந்தனர். இவர்களிற்கு அப்போதைய சோவியத் அரசு புலமைப் பரிசிலை வழங்கியிருந்தது.

கடந்த டிசம்பர் ஜோர்ஜியா ஜனாதிபதிக்கும் அவரது போட்டியாளர்களுக்குமிடையே மூண்ட மோதலைத் தொடர்ந்து இவர்கள் 35 பேரும் வெறுங்கையுடன், கடைசி ரயிலில் மாஸ்கோவுக்குத் திரும்பி அங்கு அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளதாகத் தற்பொழுது கொழும்புக்குத் தகவல் எட்டியுள்ளது.

## உதைபந்தாட்ட லீக் கூட்டம்

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 20 ஆவது வருடாந்தக் கூட்டம் நாளை இரண்டாம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (11(

## 95 குடும்பங்களுக்கு 167 ஆடுகள் வழங்கப்பட்டன!

தமிழீழ ஆய்வு நிறுவனம் மிருக வைத்தியர்களூடாகக் கால்நடைகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை, சோபபாய், சங்கானை, தெல்லிப்பழைப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 95 குடும்பங்களுக்கு 150 நல்ல இன மறியாடுகளும், 17 கடா ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடைகளைப் பெற்றவர்கள் கால்நடை வளர்ப்போர் சங்கத்தில் அங்கத்தவர்களாகியுள்ளதாகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## 30 பிரதேசக் கல்விப் பணிமனைகள் தற்பொழுது இயங்குகின்றன!

இலங்கையில் 30 இடங்களில் பிரதேசக் கல்விப் பணிமனைகள் இயங்கி வருவதாகக் கல்வி அமைச்சின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, பண்டாரவளை, சிலாபம், காலி, ஹோமகம, கல்முனை, கண்டி, குளியாப்பிட்டிய, மன்னார், மாத்தறை, மொனராகல, நிக்கவெரட்டிய, பொலனறுவ, இரத்தினபுரி, திருகோணமலை, அனுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், களுத்தற, கேகாலை, குருணாகல, மாத்தளை, மினுவாங்கொடை, முல்லைத்தீவு, நுவரேலியா, புத்தளம், தங்காலை, வவுனியா ஆகிய இடங்களில் இப்பிரதேசக் கல்விப் பணிமனைகள் இயங்கி வருகின்றன. (15)

## பழைய மாணவர் கூட்டம்

யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 29-02-92 சனிக்கிழமை காலை 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' வேலை தொடரும்

### அமைச்சர் ரணில் அறிவிப்பு

சிலாபம்- இரணவிலவில் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' அஞ்சல் நிலைய அமைப்பு வேலைகள் அப்பகுதி மக்களினதோ அல்லது கத்தோலிக்க தலைமைப் பீடத்தினதோ எதிர்ப்பினால் கைவிடப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'இது பிறநாடு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட விடயம். இந்த நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் அமெரிக்காவுடன் 1983-ம் ஆண்டே கைச்சாத்திடப்பட்டு விட்டது. அப்பகுதியில் 400 ஏக்கர் காணியை குத்தகைக்கு விடுவது சம்பந்தமான ஒப்பந்தமே கடந்த டிசம்பரில் செய்யப்பட்டது. செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு நடக்க இலங்கை கடமைப்பட்டுள்ளது' என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## வடகிழக்கு தவிர்ந்த பகுதிகளில்

### ஜனசக்தி 3-ம் கட்டம் பெப்ரவரி 10 இல் ஆரம்பம்

ஜனசக்தித் திட்டத்தின் மூன்றாம் கட்டம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்குத் தவிர்ந்த 20 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வடக்கு கிழக்கில் ஜனசக்தித் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், ஜனசக்தி திட்ட நடைமுறை இராணுவ நடவடிக்கைகளை காரணம் காட்டி நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## சாரண ஆசிரியர் பயிற்சி

வடமராட்சி சாரண ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சியொன்று இன்றும் நாளை இரண்டாம் திகதியும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (11)

## தடுப்புக் காவலிலுள்ளோரைப் பார்வையிடப் புதிய ஏற்பாடு

தெற்கிலுள்ள தடுப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களை அவர்களது நெருங்கிய உறவினர்கள் பார்வையிடுவதற்கு இருந்துவந்த கெடுபிடிகள் சற்றுத் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் இத்தகைய தடுத்துவைக்கப்பட்டோரைப் பார்வையிட இனிமேல் அந்தந்தச் சிறைச்சாலைகளின் பொறுப்பதிகாரிகளின் அனுமதியைப் பெற்றால் போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலையகப் பொலிஸ் நிலையங்களை தாக்கத் திட்டமிடப்பட்டதாம்

மலையகத்தில் இரு பொலிஸ் நிலையங்களைத் தாக்க திட்டம் தீட்டப்பட்டிருந்ததென ஊவா மாகாண பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பதுளை-ஸ்பிரிங்வெலி தோட்டக் கொள்ளை தொடர்பாக 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் மூவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களெனவும் 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## பிரான்ஸின் குடிவரவுச் சட்டத்தை

### எதிர்த்து ஒருலட்சம்பேர் ஆர்ப்பாட்டம்

பிரான்ஸின் குடிவரவு விவகாரத்தில் வலதுசாரி தேசிய முன்னணியினதும் சோஷலிச அரசாங்கத்தினதும் கடும் போக்கை எதிர்த்து பாரிஸில் ஆயிரக்கணக்கான இனவிரோத எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பாரிய ஊர்வலமொன்றை நடத்தினர்.

இந்த ஊர்வலத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.

புகலிடம் கோருவோரை விமான நிலையங்களில் 30 தினங்கள் வரை தடுத்து வைத்து அவர்கள் விடயத்தில் ஒரு முடிவு எடுக்கும் விதத்திலான சட்டத்தை உள்துறை அமைச்சர் பிலிப்பே மார்ச் சாண்ட் அறிமுகப்படுத்த முன்வந்தமை எதிர்ப்பு வாதிகளின் ஆத்திரத்தைக் கிளறியிருக்கிறது.

## பாடசாலையில் சைக்கிள் திருட்டு

பளை மகாவித்தியாலய வளவில் விடப்பட்டிருந்த இரு ஆசிரியர்களின் புதிய சைக்கிள்கள் பூட்டப்பட்ட நிலையில் திருடப்பட்டுள்ளன. (16)

## சாவகச்சேரியில்

சாவகச்சேரி தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முதலாம் திகதி காலை பத்து மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (06)

அரசியல் அவதானிப்புகள்:

## முன்னாள் சோவியத் யூனியனின் முஸ்லிம் குடியரசுகளில் எகிப்திய மற்றும் சவூதி அரேபியத் திட்டம்

எஸ்.ஜி.எம்.

முன்னாள் சோவியத் கூட்டாட்சியில் இணைந்திருந்த 15 குடியரசுகளில் 11 குடியரசுகள் சேர்ந்து ஒரு பொதுநலவாய கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளமை யாவரும் அறிந்ததே.

இந்த 11 குடியரசு நாடுகளில் துர்க்மெனிஸ்தான், தஜிகிஸ்தான், அசர்பைசான், கசக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய ஆறு நாடுகளும் முஸ்லிம் ஆதிக்கம் கொண்டவை. இவற்றின் மொத்த ஜனத்தொகை ஆறு கோடியாகும்.

இந்தப் புதிய சுதந்திரக் குடியரசு நாடுகளில் சுனி முஸ்லிம் இனத்தைக் கொண்ட எகிப்தும், சவூதி அரேபியாவும் ஒரு பக்கமாகவும் ஷியா ஐற் முஸ்லிம இனத்தைக் கொண்ட ஈரான் இன்னொரு பக்கமாகவும் தத்தமது செல்வாக்கை நிலை நிறுத்த முயன்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

எகிப்திய ஜனாதிபதி ஹுஷ்னி முபாரக் இந்த நாடுகளில் சுனி முஸ்லிம் ஆட்சி நடைபெறும் தமது நாட்டுச் செல்வாக்கை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமது அரசின் மத விவகாரங்களுக்கான அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கமையப் பெப்ரவரி 5 ஆம் திகதி நடைபெறவுள்ள ''போதகர்கள் தின'' நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கௌரவங்களைப் பெற இந்த ஆறு நாடுகளிலுமுள்ள சமயத் தலைவர்கள் எகிப்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எகிப்தும் சவூதி அரேபியாவும் இந்தக் குடியரசுகளில் உள்ள முஸ்லிம்களைத் துரிதமாகத் தம் பக்கம் கவர்ந்து அந் நாடுகளில் ஈரானின் செல்வாக்குப் பலப்படும் முன்பாகத் தமது செல்வாக்கை நிலைநிறுத்த முயல்கின்றன.

ஆனால் ஈரான் சோவியத் யூனியனின் சரிவு ஆரம்பித்த காலகட்டத்திலேயே இந்தக் குடியரசுகளுடன் படிப்படியாகத் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றுடன் இராஜியத் தொடர்புகளை ஏற்படுத்தத் திட்டமிடுகிறது.

ஈரானிய எல்லையில் உள்ள அசர் பைசானைத் தவிர ஏனைய ஐந்து நாடுகளும் சுனிமுஸ்லிம் மக்களின் ஆதிக்கம் கொண்டவையாகும்.

ஈரானைப் பொறுத்தவரை இந்த நாடுகளின் மக்களுடன் இன ரீதியாக அதிகளவு தொடர்புடைய துருக்கியையே தமது பிரதான போட்டி நாடாகக் கருதுகிறது.

இதேநேரம் சுனிமுஸ்லிம் ஆட்சி நடக்கும் சூடான் நாட்டில் ஈரானின் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

எகிப்தும் சவூதி அரேபியாவும் சூடான் தீவிரவாதக் குழுக்களுடன் இணைவது பற்றிக் கவலை தெரிவித்துள்ளன.

அத்துடன் ஈரான் சுதந்திரமாக இந்த ஆறு நாடுகளில் தமது ஷியஜற் முஸலிம் பிரிவைப் பரப்புவது பற்றியும் கவலையடைந்துளளன.

சூடானுக்கும், ஈரானுக்கும் கூட இஸ்லாமியப் புரட்சி ஏற்படுத்திய பாதிப்பு இந்தப் புதிய நாடுகளிலும் ஏற்படக்கூடாது என எகிப்தும் சவூதி அரேபியாவும் விரும்புகின்றன.

இவற்றுக்கு மேலாக இன்று இஸ்லாத்தின் தோற்றம் உலகத்தோர் கண்ணில் பாதிக்கப்பட்டிருப்பதையும், அது ஒரு பயங்கரவாத, தீவிரவாத மதம் என்ற நிலையை மாற்றவும், இஸ்லாமியப் பெருந்தன்மையை முன்னெடுக்கவும் மத மிதவாதத்தைக் கடைப்பிடிக்கும் எகிப்து முன்நிற்க வேண்டுமென்ற கருத்தில் எகிப்து செயல்படுகிறது

இஸ்லாமிய அடிப்படைவாதம் ஈரானுக்கு மட்டும் உரித்தானதல்ல என்ற தோரணையில் தான் அல்ஜீரியாவிலும் அடிப்படைவாத சக்திகள் தற்போது செயற்படுகின்றன,

இப்படியான சூழ்நிலையில் இஸ்லாமிய மிதவாத சிந்தனைகளும் செல்வாக்கும் முஸ்லிம் நாடுகளில் நிலைநாட்டபபடுவது உலக அமைதிக்கு இன்றியமையாததாகும், அதிலும் இஸ்லாமிய நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மிகவும் அபாயகரமானது.

## தோட்ட சுவிகரிப்பால் 5000 கோடி ரூபா நஷ்டம்

தனியார் பெருந்தோட்டங்களை அரசு சுவீகரித்ததால் கடந்த 20 வருடங்களில் மட்டும் சுமார் 5000 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி, கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்[illegible]ர்.

★ அரச அதிபர் உறுதிப்படுத்தியும்
★ கொழும்புக்கு அனுப்புவதற்கு

# அடையாள அட்டை விண்ணப்பம்

# யாழ். தபாலகம் ஏற்க மறுப்பு

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் கொழும்புக்கு அனுப்ப யாழ் பிரதம தபால் கந்தோருக்கு எடுத்துச் செல்லப்படும் பெரிய கடித உறையிலான கடிதங்களில் இரண்டு மூன்று கடிதங்களுக்கு மேல், அனுப்ப முடியாமல் உள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இக் கடித உறைகளில் இருப்பது முழுவதும் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களே என்றும், தடைசெய்யப்பட்ட பொருள்கள் எதுவும் இல்லை என்றும் யாழ் அரச அதிபர் உறுதிப்படுத்தி ஒப்பமிடப்பட்டிருந்த போதும் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ள தபால் கந்தோர் கருமபீடம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதனால் அடையாள அட்டையைப் பெற விண்ணப்பித்தவர்களுடைய விண்ணப்பங்கள் கொழும்பு தலைமைக் காரியாலயத்தைச் சென்றடைவதில் தாமதம் ஏற்படுகின்றது.

பெரும்பாலான மக்கள் தங்கள் விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு விட்டதா? என்பதனை அறிய யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்துக்குவந்து செல்வதையும் காணமுடிகிறது. 25

## வேலணையிலிருந்து கடிதம் வர மூன்று மாதம் செல்லும்

கடந்த வருடம் கார்த்திகை மாதம்வேலணையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணத்தில் அகதிகளாகத் தங்கியிருக்கும் தமது குடும்பத்தினருக்கு தபாலில் அனுப்பிய கடிதம் அவர்களுக்கு மூன்று மாத இடைவெளியின் பின் நேற்று முன்தினம் கிடைத்துள்ளது.

இக்கடிதம் கொழும்பு சென்று அங்கிருந்து சென்ற வாரம் கப்பலில் வந்த தபால் பொதிகளில் வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த நபர் மார்கழி மாதம் அங்கு மரணமாகிவிட்டதாக இவரது உறவினர்களுக்கு ஏற்கனவே கொழும்பில் இருந்து தகவல் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. (06)

### ஏ. எஸ். பி...

ஸைட் பெரேரா ஆகியோர் மீதே வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

புதிதாக ஏ. எஸ். பியாக தெரிவுசெய்யப்பட்டவர்களில் 15 பேர் மீது அடிப்படை மனித உரிமை மீறல் விசாரணைகள் நடைபெறுகின்றன.

இவர்களில் மேலும் ஐவர் மீது ஒழுங்கீனம், மோசடி தொடர்பான விசாரணைகளும் நடைபெறுகின்றன.

### இறக்குமதி...

அடுத்து டொக்ரர் தர்மவர்தன தனது பரிசோதனையை கைவிடுமைக்காக வர்த்தகப் 'புள்ளிகள்' சிலரும் பெருந்தொகை லஞ்சப் பணத்தை வழங்க முன்வந்ததாகவும் தாம் அதை நிராகரித்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பாலுணவுகள் இறைச்சிவகைகள் என்பவற்றில் பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு டொக்ரர் திராண்வில தர்மவர்தன ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் ஒழுங்கு செய்த செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கக் கோரிக்கை வெளியிட்டார்.

டொக்ரர் தர்மவர்தன கொழும்புப் பல்கலைக்கழக கதிர்வீச்சு மூலக ஆய்வு நிலையப் பொறுப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீலங்காவின்—

களை கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த நீண்ட ஐ நா அறிக்கையில் காணாமற்போவோர் தொகையில் ஸ்ரீலங்காவே உலகின் முன்னணி வகிக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது முக்கிய அம்சமாகும்.

ஸ்ரீலங்கா அரச படைகள் மற்றும் படையினர் ஆதரவு பெற்ற இரகஸிய இராணுவப் பிரிவுகள் குறித்து இந்த ஐ. நா அறிக்கை விரிவாக விபரித்துள்ளது.

### தலைமைப்...

இடையில் தலைமைப் பீடப் போட்டி இப்போதே ஆரம்பித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

சென்ற தேர்தலின் பின்பு இவ்விருவரும்பிரதமராவதற்கு போட்டி போட்டு இவ்வருமே தோல்வி கண்டவர்கள் என்றும் அப்போது எலியும் பூனையும் போல் எதிரிகளாக இருந்தவர்கள் என்றும் சுட்டிக் காட்டும் கொழும்புச் செய்திகள் இவர்கள் இப்போது இணைந்து ஒற்றுமையாகச் செயற்படுவார்களா என்பது கேள்விக்குறியென்றும் கூறுகின்றன.

## காலமானார்

### சின்னையா நடராஜா

(இளைப்பாறிய யாழ்ச்சேரி புத்தகக் கட்டுக்கோப்பாளர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட, இளைப்பாறிய யாழ் கச்சேரி புத்தகக்கட்டுக் கோப்பாளர் சின்னையா நடராஜா காலமானார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகபூசணி (எழுதுவினைஞர் யாழ். கச்சேரி), திருமதி இ நிவேதராணி (ஆசிரியை கல்வியங்காடு, இந்து மகளிர் வித்தியாலயம்), திருமதி சி நகேஸ்வரியம்மா (மருந்துக் கலவையாளர் சுன்னாகம், மத்திய மருந்தகம்), சிவகுமார் (சுவிஸ்லாந்து), சிவகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்னராஜன் (ஆசிரியர்), க சின்னராசா (கூட்டுறவுப் பரிசோதகர் வவுனியா), பு. மோகனதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியை, இன்று சனிக்கிழமை மு ப. 10 00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஏழாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க, சின்னராசா (மருமகன்)
கல்வியங்காடு.

0020

## ஆரியரத்தினாவுக்கு எதிராக மற்றொரு பிரசாரம்

''சர்வோதய இயக்கத் தலைவர் ஆரியரத்தினா தன்னை ஒரு சமாதானப் பிரியன்'' எனவும், சமூக சேவகர் எனவும் காட்டிக் கொண்டு சமாதானப்யாத யாத்திரைகளை மேற்கொண்டு பேரினவாத சர்வோதய அமைப்பின் தலைவராக செயற்பட்டு வருகிறார்.''

இவ்வாறு இனவெறியும், அரசியல் நோக்கமும் கொண்ட சர்வோதயத்தை வடக்கு கிழக்கில் இருந்து வெளியேற்றுவோம் என்ற தலைப்பில் வெளியான பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்திய இராணுவ அழிப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 18 கோடி ரூபா பெறப்பட்டது. ஆனால் ஆயிரம் பேருக்குத்தானும் இந்தப் பணம் வழங்கப்படவில்லை,

புனர் வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்காக வெளிநாட்டு அறக்கொடை நிதியங்களில் இருந்துபெறப்படும்பணத்தை சிங்களக் குடியேற்றவாதிகளுக்கு வழங்குவதைக் கண்டித்த இரண்டு தமிழ்ப்பணியாளர்களும் சர்வோதயத் தலைமையகத்தால் வெளியேற்றப்பட்டனர் எனவும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

### உணவு...

சேரவில்லை.

1991 செப்டம்பர் மாதம் தொடக்கம் 1992 ஜனவரி மாதம்வரையான காலபகுதிக்குரிய மதிய உணவு முத்திரைகளைத் தருவிப்பதற்குரிய நடவடிக்கையை யாழ் அரச செயலகம் மேற்கொண்டுள்ளது.

மாதாந்தம் 215,000 முத்திரைகள் இம்மாவட்டத்தின் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவேண்டுமென்பதால் 5 மாதங்களுக்குரிய இம் முத்திரைகளைப் பெற்றுவர செயலக உயரதிகாரிகள் கொழும்புக்குச் செல்லவிருக்கிறார்கள்.

### பொங்கலுக்கு...

வுப் பொருள்களையும் யாழ் மாவட்டத்திலுள்ள பலருக்கு அங்குள்ள உறவினர்களின் ஒருதனியார் நிறுவனத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களையும் ஏற்றிவந்த இக்கப்பல் பருத்தித்துறைக்கு வராது காங்கேசன்துறைமுகத்துக்குச் சென்றுள்ளதாக அறியவருகிறது

இதனால் குறித்த ப, நோ கூ. சங்கத்துக்கும் தனிநபர்களுக்கும் பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இப் பொருள்களை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதைத் தெரியாமல் இவர்கள் தடுமாறுகின்றனர் எனவும் அறிய முடிகிறது.

திவக அகதிகளுக்கு

## தற்காலிக வீடமைப்புத் திட்டம் திறந்துவைக்கப்பட்டது

தீவக மக்களுக்கான தற்காலிக வீடமைப்புத் திட்டம் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் (T. R O) தென்மராட்சி செற்டலியில் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது

இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் (மூர்த்தி), கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்டத் தளபதி செந்தாளன், தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் யோகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

2000 வீடுகள் அமைய உள்ள இக் குடியேற்றத்திட்டத்தில் சுமார் 350 குடும்பத்தினருக்கே தற்போது வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி வீடுகள் தொடர்ந்து நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

அரசாங்க புனர்வாழ்வுத் திணைக்களத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேலும் நிதி உதவி செய்து இக் குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னிலங்கை மீனவருக்கு ஜப்பான், தாய்வான் உதவி!

தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடி வசதிகள் நவீனகரமாக இல்லாமையினால் ஜப்பான், தாய்வான் மீன்பிடி நிறுவனங்களின் உதவியை நாட அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் கடல் எல்லையினுள் ஜப்பான், தாய்வான் நவீனரக மீன்பிடிக் கப்பல்கள் நுழைவதை அரசினால் தடுக்க முடியாத நிலையில் இந்நாடுகளுடன் புதியதோர் உடன்படிக்கை மூலம் இந்நாடுகளின் உதவியைப் பெற அரசு திட்டமிட்டுள்ளதாக மீன்பிடித்துறையமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதன் மூலம் தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடியை நவீனமயமாக்கலாம் எனவும் தெரிவித்தார்.

## உரத்தில் கலப்படம் இரு தமிழர் மீது விசாரணை

உரக்கூட்டுத்தாபனத்தின் உரத்தில் கலப்படம் செய்த இரு தமிழ் முதலாளிகள் மீது விசாரணை நடைபெறுகிறது

வத்தளை எல்லகந்த பகுதியில் இருந்த கலப்பு உரக் களஞ்சியம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

ஆறு தமிழர்கள் கலப்பட வேலையில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

பத்து வருடங்களாக இத்தக்கலப்பட உர விற்பனை நடைபெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

### பஞ்சாப் தேர்தலில் ஜனதாதள் போட்டி

பஞ்சாப்தேர்தலில்ஜனதாதள் இடது சாரிக்கட்சிகளுடனும் அகாலி பிரிவுகளுடனும் தேர்தல் கூட்டு ஏற்படுத்திக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடாது என முன்னாள் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

### போலிக்—

போலி கடவுச் சீட்டுக்கு 11400 கனடிய டொலர் கொடுப்பதாகவும், சில சந்தர்ப்பங்களில் 25000 அமெரிக்க டொலர்கள் கொடுப்பதாகவும் தெரிவித்த பொலிஸ் அதிகாரி இப்படியான பெரும் மோசடி இதற்கு முன்பு இடம்பெறவில்லையென்றும் சொன்னார்.

இரண்டு இலங்கைத் தமிழர்கள் 1990 இல் 1000க்கு மேற்பட்ட போலிக் கடவுச்சீட்டுகள் தயாரித்ததற்காக 3வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக மேற்படி பொலிஸ் அதிகாரி கூறினார்.

தற்போதையமோசடியிலும் ஸ்ரீலங்காதமிழர்களே சம்பந்தப்பட்டிருக்கலாமென கனடிய பொலிஸவட்டாரங்கள் தெரிவித்தன.

### சைக்கிள்...

தில் மூவர் பலியானதும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 22பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

### 28ஆம் திகதி...

சுரிக்குமாறும், வானொலியில் இதை அறிவிக்குமாறும் நீதிபதி சித்திக் அறிவித்ததாக இந்திய வானொலி குறிப்பிட்டது.

### குடிதண்ணீர்...

களும் பங்குபற்றினர்.

தை மாதத்திற்கான நிவாரணத்தில் பால் மாவகைகள் விநியோகிக்கப்படாததையும் உலர் உணவு குறைக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டிக் காரணம் கேட்கப்பட்டபோது உலர் உணவின் பெறுமதியை அரசு 10 சத விகிதத்தால் குறைந்துள்ள தெனத் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

முகாம்களில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 25

### சிலாவத்தை..

சிலாவத்தை நோக்கி நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### 15 மாவீரர்...

யில் நடைபெற்ற கூட்டத்தை விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் செல்வி. தணிகைச் செல்வி விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலைகள் அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தினர். 11

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டக்ளஸ் "லக்ஷமிபில்டிங்"இல் உள்ள அ... 01-02-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.